# பனிமயம்

பிப்ரவரி 2026

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, நலந்தானா?

"நலம் காப்போம்" என்ற தலைப்பில் இந்த மாத இதழானது மருத்துவ சிறப்பிதழாக வெளிவருகிறது. இவ்வுலகில் வாழும் மனிதருக்கு எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் உடல், உள்ள நலம் இல்லையென்றால் மற்ற செல்வங்கள் இருந்தும் என்ன பயன்? ஆண்டின் முதல் நாளிலேயே பனிமயத் தாயின் வழியாக நாம் ஆண்டவரிடம் வேண்டிக்கொண்ட ஆறு ஆசீர்வாதங்களில் முதல் ஆசீர்வாதமாக கடவுள் நமக்குத் தர மன்றாடியது "ஆரோக்கியமான வாழ்வைத்தான்".

இயற்கை மாற்றங்கள், வாகனப் புகைகள், சுத்தமில்லாத சூழ்நிலைகள், விநோதமான, துரித உணவு வகைகள், நேரம் கடந்து உறங்கச் செல்லுதல், நேரம் கடந்து விழித்தெழுதல் என்று பலவகை காரணங்கள்தான் இன்றைய நம் உடல் நலத்திற்கு கேடாக அமைந்துள்ளது. நம் உள்ளங்களை வருத்திக் கொண்டிருக்கக்கூடிய கவலைகளும், உள்ளத்தில் நாம் வைத்து வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய பொறாமை குணங்கள், காழ்ப்புணர்ச்சிகளும், பழிவாங்க நினைக்கும் எண்ணங்களும்கூட நம் உடல் நலக் குறைவுக்கு காரணங்களாகும்.

மருந்துகளும், மருத்துவர்களும் தர முடியாத ஆரோக்கியமான வாழ்வை ஆண்டவர் ஒருவர் மட்டுமே தர முடியும். அத்தகைய ஆரோக்கியமான வாழ்வை "வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே" என்று நாம் அன்பாய் அழைக்கும் நம் தாய் மரியின் வழியாக பெற்றுக் கொள்வோம்.

அனைவரும் நல்ல உடல் உள்ள சுகத்தோடு வாழ ஆண்டவர் அருள் புரிவாராக!

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை




உதயம் 27 தாரகை 6

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருள்பணி. ஸ்டார்வின்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருள்பணி. ஸ்டார்வின்



**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |



வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 100

முகவரி : **'பனிமயம்'**
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
✆ 82209 47823, www.snowsbasilica.com


## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### தீராத நோய்களால் பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்காக...

தீராத நோய்களால் பாதிக்கப் பட்ட குழந்தைகளுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் தேவையான மருத்துவப் பராமரிப்பும் ஆதரவும் கிடைக்கவும், அவர்கள் ஒருபோதும் தங்களுடைய வலிமையையும் நம்பிக்கையையும் இழக்காமல் இருக்கவும் இறைவேண்டல் செய்வோம்.

# உள்ளே...



மரியன்னையின் திருப்பெயர்கள் 4


இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள் 6


தரிசனம் தருவாய் தாயே... 8


இம்மாதப் புனிதர் 11


ஆரோக்கிய வாழ்வைத் தேடி... 12


பத்துக் கட்டளைகள் 14


கேக்கம்மா! கேக்காம்மா? 16


விவிலியப் போட்டி 18

பனிமயப் பகிர்வு 21




**2026ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் பனிமயம் இதழின் ஆண்டுச் சந்தா ரூ. 100**



# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 41 கன்னியர்களின் அரசி!

மரியன்னை மன்றாட்டு மாலையில் மரியா "கன்னியர்களின் அரசி" (Queen of Virgins) என்று போற்றப் படுகிறார். அது மரியன்னைக்குப் பொருத்தமான பெயரே. காரணம், மரியா தொடர்பான நான்கு நம்பிக்கைப் பேருண்மைகளில் (Marian Dogmas) "மரியா முப்பொழுதும் கன்னி" என்பதுவும் ஒன்று.



விவிலியம் மரியாவை "கன்னி" என்று அழைக்கிறது. இயேசுவின் பிறப்பு பற்றி எழுதிய மத்தேயு நற்செய்தியாளர் 'இதோ! **கன்னி** கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்" (மத் 1:22) என்று எசாயா இறைவாக்கினரை மேற்கோள் காட்டியுள்ளார். லூக்கா நற்செய்தியாளரும் "ஆறாம் மாதத்தில் கபிரியேல் என்னும் வானதூதரைக் கடவுள் கலிலேயாவிலுள்ள நாசரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு **கன்னியிடம்** அனுப்பினார்" (லூக்1:26) என்று பதிவிட்டுள்ளார். தொடர்ந்து, மரியா வானதூதரிடம், 'இது எப்படி நிகழும்? நான் **கன்னி** ஆயிற்றே!' (லூக் 1:34) என்று மரியாவின் வாய்மொழியாகவே சொல்கிறார்.

மரியாவின் கன்னிமை அவரைப் பின்தொடர்ந்து தங்களையே கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்த அனைத்துக் கன்னியருக்கும் எடுத்துக்காட்டாக அமைந்ததாலேயே அவர் கன்னியர்களின் அரசி என்று அழைக்கப் படுகிறார். பவுலடியாரின் பார்வையில் கடவுளுக்கு உகந்த வாழ்வு வாழும் அனைவருமே கன்னியர்தான். "கிறிஸ்து என்னும் ஒரே மணமகனுக்கும் உங்களுக்குமிடையே மண ஒப்பந்தம் செய்துள்ளேன். அவர்முன் உங்களைக் கற்புள்ள **கன்னியாக** நிறுத்தவேண்டும் என்பதே என் விருப்பம்" (2 கொரி 11:2) என்கிறார் பவுல்.

விண்ணகத்தைக் காட்சியாகக் கண்ட யோவான் தங்கள் கற்பைக் காத்துக்கொண்ட ஓர் இலட்சத்து நாற்பத்து நான்காயிரம் பேர் அரியணைமுன் நின்று புதியதொரு பாடலைப் பாடிக்கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் "தங்களைக் கறைப்படுத்திக் கொள்ளாமல் கற்பைக் காத்துக்கொண்டவர்கள்; ஆட்டுக்குட்டி சென்ற இடம் எங்கும் அதைப் பின்தொடர்ந்தவர்கள்; கடவுளுக்கும் ஆட்டுக்குட்டிக்கும் உரிய முதற்கனியாக மனிதகுலத்திலிருந்து விலைகொடுத்து மீட்கப்பட்டவர்கள்" (திவெ 14:3-4) என்று பாராட்டப்படுகிறார்கள்.

இருப்பினும், திருமண வாழ்வைத் துறந்து முற்றிலுமாகக் கடவுளுக்குத் தங்களை அர்ப்பணித்தவர்களையே திருஅவை கன்னியர் என்று அழைக்கிறது. புனித ஆக்னஸ், புனித செசிலி, புனித மரிய கொரற்றி, புனித மார்கரட் என ஒரு கன்னியர் அணியே திருஅவையை அழகு செய்கிறது. இவர்கள் அனைவருக்கும் அரசியாகத் திகழ்கிறார் அன்னை மரியா.

தங்களை முழுமையாகக் கடவுளுக்கு அர்ப்பணிக்க விரும்பும் அனைவருக்கும் ஆதரவும், அடைக்கலமுமாய் இருப்பதால் ,மரியாவைக் கன்னியர்களின் அரசி எனப் போற்றுவது பொருத்தமானதே. ★

# 42 அனைத்துப் புனிதர்களின் அரசி!



லொரெட்டோ மன்றாட்டு மாலையைக் கூர்ந்து கவனிக்கும் போது மரியா "அனைத்துப் புனிதர்களின் அரசி" (Queen of all Saints) என்று அழைக்கப்படும் போது நமக்கு சிறிய வியப்பு ஏற்படுகிறது. காரணம், திருத்தூதர்களின் அரசி, மறைசாட்சியர்களின் அரசி, இறையடியார்களின் அரசி, கன்னியர்களின் அரசி என்று நான்கு பெயர்களில் அழைத்துவிட்டு, அதன்பின் மொத்தமாக அனைத்துப் புனிதர்களின் அரசி என்கிறது இந்த மன்றாட்டு மாலை. விண்ணகத்தை அலங்கரிக்கும் அனைத்து வகையான அணிகளுக்கும் மரியா அரசியாக இருக்கிறார். எனவே, நிறைவாக அனைத்து புனிதர்களின் அரசி என்று முத்தாய்ப்பு வைக்கிறது இந்த மாலை. காரணம், எல்லாப் புனிதர்களுக்கும் அவர்தான் அரசி.

"புனிதம்" என்பது ஓர் இறையியல் பண்பு. கடவுள் மட்டுமே புனிதமானவர். அவரது புனிதத்தில் மானிடருக்கும் அவர் பங்கு தந்து மனிதரையும் புனிதராக்குகிறார். "இஸ்ரயேல் மக்களிடையே நான் தூயவராகக் கருதப்படுமாறு, என் திருப்பெயரை இழிவுப் படுத்தாதிருங்கள். நானே உங்களைப் புனிதர் ஆக்கும் ஆண்டவர்" (லேவி 22:32) என்று கடவுளே திருவுளம்பற்றியிருக்கிறார். எனவே, கடவுளோடு வாழ்பவர்கள், அவரது திருவுளத்தை நிறைவேற்றுபவர்கள் அனைவரும் புனிதர்களே. "ஆண்டவர் சீனாயினின்று வந்தார்; **பல்லாயிரம் புனிதர் புடைசூழ வந்தார்"** (இச 33:2) என்கிறது மறைநூல். விண்ணகத்தில் புனிதர் புடைசூழ மாட்சி பெறுகிறார் இறைவன்.

அத்தகைய புனிதர் அனைவருக்கும் அரசியாக மரியா போற்றப்படுகிறார். காரணம், கடவுளே அந்தப் பேற்றினை மரியாவுக்கு வழங்கியுள்ளார். எனவேதான், "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர். ஏனெனில் வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்" (லூக் 1:48-49) என்று மரியாவே தூய ஆவியாரில் நிறைந்து சான்று பகர்ந்துள்ளார்.

கடவுளே மரியாவைப் பேறுபெற்றவராக்கி, அனைத்துப் புனிதர்களுக்கும் மேலானவராக, அவர்களது அரசியாக உயர்த்தியுள்ளார் என்கின்றனர் திருஅவைத் தந்தையர். இவ்வுண்மையை ஏற்பிசைவு செய்து, 1954ஆம் ஆண்டு திருத்தந்தை 12ஆம் பயஸ் ஆகஸ்ட் 22 அன்று அரசியான புனித கன்னி மரியாவின் விழா என்று அறிவித்தார்.

ஆம், மரியா விண்ணக, மண்ணக அரசி மட்டுமல்ல, அனைவருக்கும் அரசி, தூய வாழ்வு வாழ்ந்த அனைத்துப் புனிதர்களுக்கும் அரசி என்பதில் நாம் பெருமிதம் கொள்கிறோம்.



அருள்பணி. குமார்ராஜா

# இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள்

## அன்பினால் உடனிருத்தல்



மனித குழுக்களின் நடுவே வாழும் கிறிஸ்தவர்களின் வாழ்க்கை, கடவுள் நம்மீது காட்டிய அதே அன்பினால் உயிரூட்டப் பெற வேண்டும். ஏனெனில், அதே அன்பினால் நாமும் ஒருவர் மற்றவர் மீது அன்பு கொள்ள வேண்டும் எனக் கடவுள் விரும்புகிறார் (காண் : 1யோவா 4:11).

உண்மையிலேயே, இனம், சமுதாய சூழ்நிலை, சமயம் ஆகிய வேறுபாடு எதுவுமின்றி கிறிஸ்தவ அன்பு பரந்து விரிந்து எல்லாரையும் தழுவிக் கொள்கிறது. இது எந்த ஊதியத்தையும் நன்றியையும் எதிர்பார்ப்பதல்ல. எவ்வாறு கடவுள் கைம்மாறு கருதாத விதத்தில் நம்மை அன்பு செய்தாரோ, அவ்வாறு நம்பிக்கை கொண்டோரும் கடவுள் மனிதரைத் தேடி வந்த அதே பாசத்தோடு மனிதர்மேல் அக்கறை கொண்டு அவர்களை அன்பு செய்ய வேண்டும். எனவே, எவ்வாறு கிறிஸ்து எல்லா நகரங்களுக்கும் சிற்றூர்களுக்கும் சென்று இறையாட்சியின் வருகையின் அடையாளமாக எல்லா நோய் நொடிகளையும் குணமாக்கினாரோ, அவ்வாறே திருச்சபையும் தன் மக்களின் வழியாக எத்தகைய சூழ்நிலையில் வாழும் மனிதரோடும், இன்னும் சிறப்பாக வறியவரோடும், துன்புறுவாரோடும் இணைந்து அவர்களுக்காகத் தன்னையே மனமுவந்து அளிக்கின்றது. திருச்சபை உண்மையாகவே அவர்களுடைய இன்பங்களிலும் துன்பங்களிலும் பங்கு கொள்கிறது; வாழ்வின் ஏக்கங்களையும் புதிர்களையும் உணர்கிறது; அவர்களோடு மரண வேதனையில் துன்புறுகிறது. அமைதியைத் தேடுவோர்க்குத் திருச்சபை நற்செய்தியின் அமைதியையும் ஒளியையும் அளித்துச் சகோதர உரையாடலால் பதிலளிக்க விழைகிறது.



சமுதாய, பொருளாதாரக் காரியங்களைத் தக்க முறையில் ஒழுங்குபடுத்த கிறிஸ்தவர்கள் பாடுபட வேண்டும். மற்ற அனைத்து மக்களோடும் ஒத்துழைக்க வேண்டும். பல்வேறு வகையான பள்ளிகள் வழியாக, இளைஞர்களுடையவும் குழந்தைகளின் கல்வியிலும் தனிக்கவனம் செலுத்த அவர்கள் முன்வர வேண்டும். கிறிஸ்தவ இளைஞர்களை உருவாக்கி வளர்க்கப் பயன்படும் சிறந்ததொரு கருவி என மட்டும் இப்பள்ளிகளைக் கருதாமல், மனிதருடைய மாண்பை உயர்த்தி, மேலும் மனிதத் தன்மை மிக்க சூழ்நிலைகளை உருவாக்க மனித குலத்திற்கு, இன்னும் சிறப்பாக வளரும் நாடுகளுக்கு, பெருமதிப்புள்ள சேவை புரிபவைகளாகவும் இவற்றைக் கருத வேண்டும். மேலும், பசி, அறியாமை, நோய்கள் போன்றவற்றிற்கு எதிராகப் போராடி, வாழ்க்கை நிலையை உயர்த்தவும் அமைதியை உலகில் நிலைநாட்டவும் பாடுபடுகின்ற மக்கள் செய்யும் முயற்சிகளில் கிறிஸ்தவர்களும் பங்குகொள்ள வேண்டும். நம்பிக்கை கொண்டோர் இப்பணியில் தனி, பொது நிறுவனங்கள், அரசுகள், பன்னாட்டு இயக்கங்கள், பல்வேறு கிறிஸ்தவச் சமூகங்கள் மற்றும் கிறிஸ்தவமல்லாச் சமயங்கள் ஆகியவை செயல்படுத்தும் திட்டங்களோடு தாங்களும் முன்மதியோடு இணைந்து உழைக்க வேண்டும்.

திருச்சபை உலகியல் அமைப்பை ஆட்சி செய்யும் துறையில், குறுக்கிட எவ்விதத்திலும் விரும்புவதில்லை. கடவுளின் துணையோடு, அன்பிலும் பிரமாணிக்கமான சேவையாலும், மனிதருக்குப் பணிபுரிவதைத் தவிர வேறு எந்த அதிகாரத்தையும் அது தனக்கெனக் கோருவதில்லை.

– திருச்சபையில் நற்செய்திப்பணி : எண்-12

தொகுத்தளிப்பவர் :

**கலாபன் வாஸ்**




“நீ எத்தனை மணிக்கு வந்தே?”
“எட்டு மணிக்கு”
“நீ எத்தனை மணிக்கு வரணும்?”
“ஏழரைக்கு”
“இப்பதான் உனக்கு ஏழரை ஆரம்பிக்கு”

## வரவேற்கிறோம்



### திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | மெஜோரின் சியாரா | கவின் ஜோன்லின் | 04.01.2026 | குழந்தை இயேசு |
| 2. | ஷாண்ட்டா மரியா | ஸ்மைல்சன் - ஷிமோனா | 18.01.2026 | அந்தோணியார் |

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 6



தெப்பியக் மலையில் அன்னை மரியாவின் காட்சியை யுவான் டியேகோ பெற்றுக் கொண்டதையும், அன்னை அவரிடம் சொன்ன செய்திகளையும் கடந்த இதழில் பார்த்தோம். அன்னையின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, மெக்சிகோ சென்ற யுவான் டியேகோவின் அனுபவங்களை இந்த இதழில் பார்க்கலாம்.

மெக்சிகோ நகரம். நான்கு திசைகளில் இருந்தும் வாயில்களைக் கொண்ட ஓர் அழகிய நகரம். ஆயர் சுமராகாவின் இல்லம் அங்குதான் அமைந்திருந்தது. தெப்பியக் மலையிலிருந்து வடக்குச் சாலை வழியாக மெக்சிகோ வந்து சேர்ந்த யுவான் டியேகோ, வேகமாக அங்குள்ள ஆயர் இல்லத்திற்குச் சென்றார்.

பழங்குடியினத்தைச் சார்ந்த ஒரு மனிதன், படிப்பறிவற்ற பாமரன், கிராமப்புற உடையோடு ஆயர் இல்லத்திற்குள் நுழைந்தபோது அங்கிருந்தோர் அவரை வியப்போடு பார்த்தனர். ஒரு சிலர் அவரைக் கிண்டலாகப் பேசுவதும் அவர்காதில் விழுந்தது. யுவான் டியேகோவிற்கு அவர்களது ஏளனங்கள், கிண்டல்கள் எதைப் பற்றியும் கவலையில்லை.

படைப்பனைத்திற்கும் அரசியாக அன்னை கன்னிமரியாவைக் கண்ணாரக் கண்டு, அவரது வார்த்தைகளைக் காதாரக் கேட்டு, அன்னை தந்த பணியைச் செய்வதற்காக வந்திருக்கும் நிலையில், இதைப் பற்றி அக்கறை கொள்வதற்கு எதுவும் இல்லை என்பதே அவரது எண்ணம். அவரது மனம் முழுவதும் ஆயரைச் சந்திக்க வேண்டும், அன்னை சொன்ன செய்தியைச் சொல்ல வேண்டும் என்பதில் மட்டும்தான் கருத்தாயிருந்தது. மனம் முழுக்க மாதாவைச் சுமந்தபடி, ஆயரின் அறைக்கு வெளியே அமைதியாகக் காத்திருந்தார், யுவான் டியேகோ.

நீண்ட காத்திருப்பிற்குப் பிறகு, ஆயர் சுமராகாவைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. பிரம்மாண்டமான அரண்மனையில், கம்பீரமாக அமர்ந்திருக்கும் ஆயரைப் பார்த்ததும், முழந்தாள்படியிட்டு அவருக்கு வணக்கம் செலுத்தினார். கொஞ்சமும் தாமதிக்காமல், தான் சொல்ல வந்ததை



முழுமையாகச் சொல்லி முடித்தார். அன்னையைப் பார்த்தது, அவர் குரலைக் கேட்டது, ஆலயம் எழுப்பவேண்டும் என்ற அவரது விருப்பம் என அனைத்தையும் ஒன்றுவிடாமல் சொல்லி முடித்தார்.

ஒரு எளிய பிரான்சிஸ்கன் துறவியாகத் தன் பணிவாழ்வைத் தொடங்கி, மெக்சிகோவின் பூர்வீகக் குடிகளுக்கு ஆதரவாகவும், ஆதிக்க சக்திகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்து, மக்களின் அன்பைப் பெற்று ஆயராக உயர்ந்துள்ள ஆயர் சுமராகா, யுவான் டியேகோவின் சொற்கள் அனைத்தையும் அமைதியாகக் கேட்டார்.

யுவான் டியேகோ பேசியது முழுவதையும் பொறுமையாகக் கேட்டு முடித்த பிறகு, அவருக்கு என்ன பதில் சொல்வதென்றே ஆயருக்குத் தெரியவில்லை. "பிறகு பேசுவோம், மற்ற அருள் தந்தையரோடு கலந்து பேசிவிட்டு சொல்கிறேன்" என்று ஆயர் முடித்துக் கொண்டார்.

"அன்பு மகனே, வா, உடனே சென்று ஆலயம் கட்டும் பணியைத் தொடங்கலாம்". இப்படி ஒரு பதில் ஆயரிடமிருந்து வரும் என்றுதான் யுவான் எதிர்பார்த்திருந்தார். ஆயரின் அமைதி அவரைக் கவலைக்குள்ளாக்கியது. ஒரு பழங்குடி மனிதனாகிய தன்னுடைய வார்த்தைகளுக்கு மதிப்பு இருக்காது என்பது யுவானுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் கடவுளின் தாயாகிய கன்னி மரியாவின் வார்த்தைகள் இவை என்பதை அவர்கள் நம்பாததுதான் அவரை அதிகம் வேதனைப்படுத்தியது.

துயரத்தோடு அதே வடக்குச் சாலை வழியாக தெப்பியக் நகரை நோக்கி நடக்கத் தொடங்கினார். மெக்சிகோவிற்கு வரும்போது அவரது உள்ளத்தில் இருந்த ஆர்வம், பரபரப்பு, மகிழ்ச்சி இவையனைத்தும் சுத்தமாய்க் காணாமல் போயிருந்தன. வாடிய முகத்தோடும், கவலை தோய்ந்த உள்ளத்தோடும் கால்போனபோக்கில் நடந்து கொண்டிருந்தார்.

தெப்பியக் மலைக்கு அருகில் வந்தபோது அவரது கண்களை அவராலேயே நம்பமுடியவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன்னால் காணாமல் போயிருந்த மகிழ்ச்சி, பரபரப்பு மீண்டும் அவரைத் தொற்றிக் கொண்டது. ஆம், அதிகாலையில் எந்த இடத்தில் அன்னையை அவர் சந்தித்தாரோ, அதே இடத்தில் இன்னும் ஒளிவெள்ளம் கொஞ்சம் கூடக் குறையவில்லை. மெக்சிகோ சென்று வந்த தன் மகனுக்காகத் தாய் மரி அங்கேயே காத்துக் கொண்டிருந்தார்.

வெடித்து விட்டார் யுவான் டியேகோ: "நினாமியா (Nina Mia)" (தமிழில்: என் தாயே, என் அம்மா) பேச வார்த்தைகளின்றி இந்த இரண்டு வார்த்தைகளை மீண்டும் மீண்டும் சொல்லிக் கத்திக் கொண்டே இருந்தார். கொஞ்ச நேரம் அழுது தன்னை ஆசுவாசப்படுத்திய பிறகு, கண்களில் வழியும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பேசத் தொடங்கினார்: "அம்மா, நீங்கள் தந்த கட்டளையை நிறைவேற்ற மெக்சிகோ சென்றேன். ஆயரையும் சந்தித்தேன். நீங்கள் சொன்ன எல்லாவற்றையும் சொன்னேன். ஆனால், யாருமே என்னை நம்பவில்லை தாயே. இந்த அன்றாடங்காய்ச்சியின் அபலைக் குரல் அம்பலம் ஏறாது அம்மா. ஒன்றுமில்லாத, புழுவுக்குச் சமமான என்னை விட்டுவிட்டு தகுதியான, நம்பத்தகுந்த வேறு ஒருவரை இந்தப் பணிக்குத் தேர்வு செய்யுங்கள் தாயே". அழுது அரற்றிக் கொண்டே இருந்தார் யுவான்.

"மகனே யுவானிட்டோ, என் செல்லப் பிள்ளையே, என் மாட்சியைப் பறைசாற்றும் கருவியாக நான் உன்னையே தேர்ந்துள்ளேன். என் ஆசை உன் வழியாகத்தான் நிறைவேறியாக வேண்டும்.

இது என் விருப்பம் மட்டுமல்ல, இதுதான் கடவுளின் திருவுளம். கலங்காதே மகனே, நாளை மீண்டும் ஆயரைச் சந்தித்துப் பேசு. என் கட்டளை உன் வழியாக நிச்சயம் நிறைவேறும்” அமைதியான, ஆழமான வார்த்தைகளால் நம்பிக்கையூட்டினார் அன்னை மரியா.

யுவான் டியேகோவின் முகத்தில் புத்தொளி வீசியது, மனதில் புதுத் தெம்பு பிறந்தது. “அம்மா, நிச்சயமாக நாளையும் போகிறேன். இதுதான் கடவுளின் சித்தமென்றால் அதை நிறைவேற்ற என் உயிரையும் கொடுப்பேன்”. அன்னையை வணங்கிவிட்டு, வீட்டிற்குச் சென்றார் யுவான்.

மறுநாள் 10 டிசம்பர் 1521, ஞாயிற்றுக்கிழமை. மனம் முழுக்க மாதாவையே நினைத்துக் கொண்டிருந்ததால் தூக்கமின்றித் தவித்த யுவான் டியேகோ அதிகாலையிலேயே எழுந்தார். திருப்பலிக்குத் தயாரானார். டெட்லகோ நகருக்கு நடந்து சென்றதோ, அங்கே ஞாயிறு திருப்பலியில் பங்கெடுத்ததோ எதுவும் அவருக்கு நினைவில் இல்லை.

திருப்பலி முடிந்ததும் அவரது கால்கள் அவரையும் அறியாமல் ஆயர் இல்லத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தன. அமைதியான, சலனமற்ற மனதோடு ஆயர் அறைக்கு வெளியே அமர்ந்திருந்தார், யுவான் டியேகோ.

மீண்டும் அதே இடம், அதே பணியாளர்கள், அதே ஏளனம், கிண்டல். பல மணி நேரம் காத்திருந்தும் ஆயரைப் பார்க்க முடியவில்லை. இல்லை, இல்லை, பார்க்க அனுமதிக்கவில்லை. அதன் பிறகு என்ன நடந்தது? காத்திருங்கள் அடுத்த இதழ் வரை....




அருள்பணி.
க.செ. பிரவீன் ராசு


**அடுத்த மாத இதழ்,**
**“மாண்புறும் மகளிர்”**
**எனும் தலைப்பில்**
**மகளிர் சிறப்பிதழாக**
**வெளிவருகின்றது.**
**படைப்புகள்**
**வரவேற்கப்படுகின்றன.**

*வாழ்த்துகின்றோம்*

## புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | க்ரூஸினா பின்னி | புஷ்பராஜா - ஃபினலா வாஸ் | 03.01.2026 | குழந்தை தெரசா |
| 2. | ஹெய்தி பர்னான்டோ | ஹென்றி - சிந்துஜா | 11.01.2026 | குழந்தை இயேசு |
| 3. | மரிய ரொசாரி ஜாஃபிட்டா | ஆக்னல் - பிரின்சி | 11.01.2026 | சவேரியார் |
| 4. | கிறிஸ் ஜேக்கப் மச்சாடோ | இம்மானுவேல் மச்சாடோ - அன்டோனெட் | 18.01.2026 | மணல் மாதா |
| 5. | டேவ் ஜோனதன் மச்சாடோ | இம்மானுவேல் மச்சாடோ - அன்டோனெட் | 18.01.2026 | மணல் மாதா |



# இம்மாதப் புனிதர்



## புனித ஜான் தே பிரிட்டோ (அருளானந்தர்) (பிப்ரவரி 4)

செம்மண் புனிதர் அருளானந்தர் கி.பி. 1647ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் போர்ச்சுக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்தார். இவருடைய குடும்பம் போர்ச்சுக்கல் நாட்டு மன்னர் இரண்டாம் பெட்ரோ என்பவருக்கு மிக நெருக்கமான குடும்பம்.

சிறுவயதில் கடுமையாக நோய்வாய்ப் பட்டார். இதனால் இவருடைய அன்னை புனித சவேரியாருக்கு இவரை ஒப்புக்கொடுத்து செபித்தார். “சவேரியாரே! என்னுடைய மகன் உயிர் பிழைத்தால், உம்மைப் போன்று என்னுடைய மகனையும் அருள்பணிக்காக அனுப்பி வைப்பேன்” என்றார்.

சிறுவயது முதலே சவேரியாரைப் போன்று உடையணிந்தார். கி.பி. 1663ஆம் ஆண்டு ஜான் தே பிரிட்டோ சேசு சபையில் சேர்ந்து 1673ஆம் ஆண்டு குருவாக அருள்பொழிவு செய்யப்பட்டார்.

இவர் படிக்கும் காலத்திலேயே அறிவோடும் பக்தியோடும் இருந்ததால், இவரை குருமடத்தில் பேராசிரியராக பணியாற்ற துறவு மடத் துறவிகள் நினைத்தார்கள். ஆனால் இவரோ, இந்தியா சென்று மறைபோதகராக தூய சவேரியாரைப் போன்று நற்செய்தி பணிசெய்ய வேண்டும் என்ற தனது இலட்சிய கனவை வெளிப்படுத்தினார்.

1678இல் இந்தியாவில் உள்ள கோவாவில் வந்திறங்கிய ஜான் தே பிரிட்டோ, அங்கிருந்த சூழ்நிலைகளை நன்கு அறிந்துகொண்டு, தமிழ் மொழியைக் கற்று, தன்னை இந்து சந்நியாசி போல் மாற்றிக்கொண்டார்.

அருளானந்தர் தொடக்கத்தில் தட்டுவாச்சேரி என்ற பகுதியில் மறைபோதகப் பணியை ஆற்றிவந்தார். அதன்பிறகு இராமநாதபுரம் பகுதியில் தனது நற்செய்திப் பணியைத் தொடங்கினார்.

அப்போது தடியத்தேவர் என்னும் குறுநில மன்னன் நோய்வாய்ப்பட்டிருந்தார். யாராலும் அவரை குணப்படுத்த இயலவில்லை. அருளானந்தரைப் பற்றிக் கேள்வியுற்ற மன்னன் அவரை அரண்மனைக்கு அழைத்து அவருக்காக செபிக்க வேண்டினார். அருளானந்தர் செபிக்க, மன்னன் நோயிலிருந்து குணமடைந்தார். பின்பு, அருளானந்தரிடம் திருமுழுக்கு பெற்று, கிறிஸ்துவின் போதனைகளை இன்னும் ஆர்வத்தோடு அறியத் தொடங்கினார்.

ஐந்து மனைவிகளோடு வாழ்ந்து கொண்டிருந்த குறுநில மன்னன் தடியத்தேவன் கிறிஸ்துவின் போதனையை அறிந்த பின்னர், முதல் மனைவியை மட்டும் தன்னுடன் வைத்துக் கொண்டு மற்ற நால்வரையும் அவரவர் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்.

தடியத்தேவரால் அனுப்பிவைக்கப்பட்ட நால்வருள் ஒரு மனைவியின் சகோதரன் சேதுபதி, இதைக் கேள்விப்பட்டு, அருளானந்தர் மேல் சீற்றம் கொண்டார். அவரைக் கொலை செய்ய திட்டம் தீட்டினான். 1693ஆம் ஆண்டின் தொடக்கத்தில், அருளானந்தரை கைது செய்து பலவாறு சித்ரவதை செய்தான். பாழுங்கிணற்றில் தலைகீழாக இறக்கினான். பாறையில் உருட்டி விட்டான். பிப்ரவரி 4ஆம் நாள் ஓரியூருக்கு இழுத்துச் சென்றான். அங்கு, தலை வெட்டுண்டு கொலை செய்யப்பட்டார். அருளானந்தர் ஓரியூரில் மறைசாட்சியாக தன்னுயிரை நீத்தார்.

அவர் இறந்த பிறகு ஏழு நாள்கள் தொடர்ந்து அவ்வூரில் மழை பெய்தது. இயேசுவுக்காக நம் உயிரைத் துறப்பது மிகப்பெரிய பேறு. அத்தகைய பேற்றினை புனித அருளானந்தர் பெற்றார். அவருடைய விழாவினைக் கொண்டாடும் நாமும் இயேசுவின் பணியைத் துணிவோடு செய்வோம்.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

# ஆரோக்கிய வாழ்வைத் தேடி...

## (லூர்து அன்னை திருவிழா - பிப்ரவரி 11)



உடல் நலமும் மனநலமும் இணைந்து செயல்படும்போது மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்கிறது. “நலமா” என்ற சொல் அனைவரையும் ஒன்றிணைக்கும் சகோதரத்துவத்தின் வெளிப்பாடு. அன்பையும், ஆறுதலையும், அரவணைப்பையும் தரும் சொல். மனிதன் நோயின்றி, நலமாக வாழ தூய்மையான அறுசுவை (இனிப்பு, புளிப்பு, காரம், உப்பு, கசப்பு, மற்றும் துவர்ப்பு) உணவு, சுவைநீர், இரவு நிம்மதியான தூக்கம், கழிவு நீக்கம், இறை உறவு, (தியானம்) சக மனிதர்களோடு உறவு, இயற்கையோடு உறவு போன்றவை அவசியம்.

கடவுளின் படைப்பாகிய மனித உடலின் உறுப்புகளையும், அதன் இயக்கங்களையும் எண்ணி வியக்காமல் இருக்க முடியாது. சுற்றுச்சூழல் பாதிப்பால் உடல்நிலைப்பாதிப்பு ஏற்படுவது உண்டு.

*“பிழையை பிழையென்று உணராப் பிழையே பிழையுட் பெரிதாம் பிழை”.*

நாமே நமக்கு குழிதோண்டுவதைப் போன்று, கடவுள் தான் படைத்ததை நல்லதென்று கண்டதை மனிதன் தனது செயல்பாட்டினால் மாசுபடுத்துகிறான். தமக்கு தாமே அழிவைத் தேடிக் கொள்வதோடு நல்வாழ்வுக்கான விதிகளை மறந்து, தம் தலைமுறைகளையும் அழிவுப்பாதைக்கு இழுத்துச் செல்கிறான்.

நிலம் இராசாயன உரங்களாலும், நீர் இராசாயன கழிவுகளாலும், காற்று ஆலைகளின் புகையினாலும், ஆகாயம் புகை மண்டலத்தாலும் மாசுபடிந்து சுற்றுப்புறத்தை அசுத்தமாக்கி விடுகின்றன. ஆதி பெற்றோர் வாழ்ந்த காலத்திலிருந்தே “செய்யாதே” என்றால் அதை மீறி செய்வதே மனிதர் குணமாக உள்ளது. போதைப்பொருள்கள் உடல் நலத்தைப் பாதிக்கும் என்று அறிவுறுத்தினாலும், அப்பொருள்களின் நடமாட்டம் அதிகமாகி வளரும் தலைமுறைகளைப் பாழ்படுத்துகிறது.

நம்மைச் சுற்றி வாழ்பவர்களை மகிழ்வித்து, நாமும் மகிழ்ந்து வாழ்வதுதான் கிறித்துவத்தின் நோக்கமாக இருக்க வேண்டும். நம் தலைமுறைகளை நன்கு படிக்க வைத்து, அதிக பணம் சம்பாதிக்க உருவாக்குவதில் கவனம் செலுத்துவதை விட இயற்கையோடு இணைந்து, ஆரோக்கிய வாழ்வு வாழ பயிற்றுவிக்க வேண்டும். உடற்பயிற்சி, அளவான உணவு, உழைப்பு சீரான உடல் நலத்திற்கு மிகவும் அவசியம்.

“அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சு”,

உடற்பயிற்சி, உணவு, உறக்கம் போன்றவை அளவோடு இருக்க வேண்டும்,

“படுத்தே இருப்பவனுக்கு பாயே பகையாகும்; பேசியே திரிபவனுக்கு வாயே பகையாகும்”



உடல் நோயற்று இருப்பது, மனம் கவலையற்று இருப்பது, பிற உயிர்களுக்கு உதவியாக இருப்பது இம்மூன்றும் வாழ்வில் இன்பமானது.

“நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்”

“ஓடி ஓடி உழைத்து ஓய்ந்த பிறகுதான் தெரிகிறது தவற விட்ட ஆரோக்கியந்தான் உண்மையான செல்வம் என்று. தள்ளாத வயதிலும் நம் வேலைகளை நாமே செய்யும் ஆற்றல் பெறுவதுதான் நாம் தேடும் செல்வம்.

ஒரு போட்டியில், எவ்வளவு தூரம் ஓடுகிறோமோ, அந்த இடம் பந்தயத்தில் ஓடியவர்க்கே சொந்தமாகும் என்ற அறிவிப்பைக் கேட்டு, சிலர் தன்னால் முடிந்த அளவு ஓடினர். ஒருவன் தனது திறமையைக்காட்ட ஓடிக்கொண்டே இருந்தான். இறுதியில் நீர்ச்சத்து குறைந்து அந்த இடத்திலேயே இறந்து விடுகிறான். இதனால் பயனென்ன?

நமது வாழ்க்கை முறை இயந்திரமாகி, கைபேசி, மடிக்கணிணி இவற்றில் நமது கவனம் அதிகமாகிறது. தனிமை அதிகரிக்கிறது. உடல்நலம் மட்டுமின்றி மனநலமும் பாதிக்கிறது. எப்போதும் நேர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். எப்போதும் தோல்வி, நோய், பலவீனம் மனிதனை நோயாளி ஆக்கி விடும். கவலை, குழப்பம் இவற்றை நம்பிக்கையோடு இறைவனிடம் ஒப்படைத்து விட்டு நம் பணிகளை நேர்மையோடு செயலாற்ற வேண்டும்.

நமக்காகப் பரிந்து பேச நமது அன்னை நம்மோடு இருக்கிறார். லூர்து அன்னை என்றவுடன் நமக்கு கெபிதான் நினைவிற்கு வருகிறது. பிரான்சு நாட்டின் லூர்து நகரில் மசபியேல் என்ற குகையில் பெர்னத் சூபிரூஸ் என்ற 14 வயது சிறுமிக்கு தொடர்ச்சியாக காட்சியளித்தார். மரியன்னையின் கட்டளைப்படி ஒரு இடத்தைத் தோண்ட, அங்கு நீரூற்று பீறிற்றெழுந்தது. அதுவே ஓடையாகி, திருப்பயணிகளின் நோய் நீக்கும் மருந்தாகியது. உலகின் பல பகுதியினின்று வரும் நம்பிக்கையுள்ள நோயாளிகள் சுகம் பெற்று செல்கின்றனர்.

திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் பிப்ரவரி 11ஆம் நாளை உலக நோயாளர்களின் தினமாக, 1992 ஆம் ஆண்டிலிருந்து நாம் கொண்டாட வழிவகுத்துள்ளார். “உணவே மருந்து, மருந்தே உணவு” என்பதற்கேற்ப வாழ்ந்து அன்னை மரியின் வழியில் இறைவனோடு ஒன்றித்து மகிழ்ந்திருப்போம்!



**ரோஸ் சேவியர்**

## ஆசி கூறுகின்றோம்



## திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 1. | ஜோயல் -ரோசரி ஜூவானா | பனிமயம் | 18.01.2026 |
| 2. | ஸ்டான்யோ பர்னான்டோ-ஜீன் மௌனிகா | திவ்வியபாலன் | 25.01.2026 |
| 3. | எபின் ஃபெர்டினன்ட் - ஸ்நோஷினி | அன்னை வேளாங்கன்னி | 25.01.2026 |
| 4. | சிலாஜ் - டீனு | சூசையப்பர் | 28.01.2026 |



# பத்துக் கட்டளைகள்









பிப்ரவரி 11 புனித லூர்து அன்னை திருவிழா மட்டுமல்ல அன்று உலக நோயாளர்கள் தினமும் கூட.....

இன்றைய உலகில் விஞ்ஞான அறிவியல்களும், சமூக, பொருளாதார அறிவியல்களும் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவற்றிற்கெல்லாம் மேலாக மனித வாழ்வில் "வாழ்வியல்" என்பது மனிதனின் வாழ்க்கை பற்றிய பரந்த அறிவை நமக்குத் தருகிறது.

கவிஞர் வைரமுத்து அவர்கள் "ஆறை விட ஐந்து பெரியது"? என்னும் கவிதையில் விலங்குகள் மனிதனை விட எப்படி உயர்ந்து நிற்கின்றன என்று விளக்கும்போது எந்த விலங்கும் இரைப்பைக்கு மேலே தொப்பை வளர்ப்பதில்லை என்பார்..

நலமாக வாழ வேண்டிய மனிதன் தனது வாழ்க்கை முறையால் நோய்களை வருவித்துக் கொள்கிறான் என நாம் அறிவோம். மனிதன் எவ்வாறு வாழவேண்டும்? என்ற வழிமுறைகளை அறிந்து கொள்ளாமலேயே வாழ்ந்து முடிக்கிறான். ஆனால் அதிலிருந்து வெளிவருவது எப்படி என்பதை விவிலியம் அழகாக சொல்கிறது. அதிலிருந்து சிறந்த பத்து கருத்துக்களை கட்டளைகளாக தொகுத்ததே இந்த கட்டுரை .

**1. மன வலிமையை வளர்த்துக் கொள்ளுங்கள் (நீதிமொழிகள் 18:14)**

உங்கள் ஆழ் மனம் நீங்கள் பேசுவதைக் கேட்கிறது. உங்கள் சொந்த உடலிடம் மரணத்தைப் பற்றி பேசுவதை நிறுத்துங்கள். உங்கள் மனதை இளமையாக வைத்திருங்கள். மன பயம் நோய்களின் வாயில்...

**2. தூக்கத்திற்கு முன்னுரிமை கொடுங்கள் (திருப்பாடல்கள் 127:2)**

தூக்கம் ஒரு ஆடம்பரம் அல்ல... அது பழுதுபார்க்கும் முறை. , நீங்கள் எவ்வளவு ஒழுக்கமாக இருந்தாலும் சரி. தூக்கம் இல்லாதபோது, ஹார்மோன்கள், நோய் எதிர்ப்பு சக்தி, கொழுப்பு இழப்பு மற்றும் மனத் தெளிவு அனைத்தும் பாதிக்கப்படுகின்றன.

**3. உடல் நலம் பெற உடற்பயிற்சி செய்யுங்கள். (1திமொத்தேயு 4:8)**

இயக்கம் நிற்கும்போது வயதானது துரிதப்படுத்தப்படுகிறது. சோம்பல் மெதுவாக உயிர்சக்தியைக் குறைக்கிறது; ஒழுக்கம் அதைப் பாதுகாக்கிறது. வலிமை, பயிற்சி என்பது அழகியலைப் பற்றியது அல்ல... அது வளர்சிதை மாற்றம், ஹார்மோன்கள் மற்றும் உடல் சுதந்திரத்தைப் பாதுகாக்கிறது. எனவே நடைபயிற்சி, சுவாசப் பயிற்சி போன்றவற்றை தினம் செய்யுங்கள் .



**4. உணவை மருந்தாகக் கருதுங்கள் (தானியேல் 1:12-15)**

இயேசுவே தன்னை உணவாகத் தந்தார் என்பதிலிருந்து உணவின் மகத்துவம் புரிகிறது. அளவாக, சத்தான உணவை தேர்ந்தெடுப்போம் .

**5. உறவை பலப்படுத்துங்கள் & புதுப்பியுங்கள் (யோவான் 1 :14)**

இறைவன் நம்மோடுள்ள உறவை புதுப்பிக்க தன் அன்பு மகனையே மனு உரு எடுக்க செய்தார். நாம் முறிந்து போன உறவுகளை புதுப்பிக்க என்ன செய்யப் போகிறோம் என்பது உள கவலைகளைப் போக்கி நம்பிகையூட்டும் என்கிறது மருத்துவ அறிவியல் .

**6. உயர் நோக்கத்துடன் கூடிய உங்கள் பணியைக் கண்டறியுங்கள் (எபே 2:10)**

நீங்கள் நோக்கத்துடன் எழுந்திருக்கும் போது, உங்கள் உடல் பின்தொடர்கிறது. ஒரு வலுவான 'ஏன்' என்பது மீள்தன்மை, ஒழுக்கம் மற்றும் நீண்ட ஆயுளைத் தூண்டுகிறது.

**7. கடவுளுடைய வார்த்தையைப் படியுங்கள் (திருப்பாடல்கள் 103:5)**

கடவுளுடைய வார்த்தை வெறும் தகவல் தருவதில்லை... அது புதுப்பிக்கிறது. இறைவார்த்தை - தினசரி ஊட்டச்சத்தாக மாறும்போது, வலிமை மீட்டெடுக்கப்படுகிறது மற்றும் இளமை உள்ளிருந்து வெளியே பாய்கிறது.

**8. இறை வார்த்தையில் அமைதியாக தியானம் செய்யுங்கள் (எசாயா 41:1)**

மௌனம் என்பது நிலைநிறுத்துதல். அமைதியில், தியானத்தில் நமது உடல் உள வலிமை புதுப்பிக்கப்படுகிறது. பலர் வேலையால் அல்ல - சத்தத்தால் சோர்வடைகிறார்கள்.

**9. தூய ஆவியில் செபியுங்கள் (1 கொரிந்தியர் 14:4)**

ஆவியில் செபிப்பது தன்னைத்தானே கட்டியெழுப்புகிறது, உள் அமைப்பை பலப்படுத்துகிறது, உணர்ச்சிகளை ஒழுங்குபடுத்துகிறது, சகிப்புத்தன்மையை உருவாக்குகிறது என்று திருவிவிலியம் கூறுகிறது,

**10. மன அழுத்தத்தை ஏற்படுத்தாதீர்கள் / கவலைப்படாதீர்கள் (மத்தேயு 6:27)**

நாள்பட்ட மன அழுத்தம் உடலை உயிர்வாழும் நிலையில் வைத்திருக்காது. கவலை ஆயுளை நீட்டிக்காது.

இறைவனை நம்பி பயணப்படுவோம். இறைவார்த்தை நம் மருந்தாகட்டும். நமது உடல் உள்ள நோய்கள் அன்னை மரியின் பரிந்துரையால், இறை வார்த்தை வல்லமையால் குணமாகட்டும்.



முனைவர். சி.ஜாக்சன்

## செபிக்கின்றோம்

### இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 1. | தனபால் கொரைறா | மெடோனா | 03.01.2026 | சூசையப்பர் |
| 2. | அந்தோணி | தமிழ் செல்வி | 10.01.2026 | அன்னை வேளாங்கன்னி |
| 3. | ஹெலினா | பீட்டர் | 20.01.2026 | அந்தோனியார் |
| 4.. | ரெஜி | போஸ்கோ பர்னாந்து | 24.01.2026 | அந்தோனியார் |

# கேக்கம்மா! கேக்காம்மா?



“அக்கா உங்களுக்குக் கூடப்பிறந்த சகோதரர் யாருமில்லையோ?”

“ஏன் இல்லை. ஒரு அண்ணன் ஒரு தம்பி இருக்கிறார்களே! ஏன் கேட்கிறீங்க?”

“இல்ல, அந்த ஆலய அல்போன்ஸ்க்கு மட்டும் நீங்கள் ரொம்ப பிரியம் காட்டுகிறீர்கள். அதாவது உங்கள் பேக்கரியில் கிறிஸ்மஸ், புத்தாண்டு மற்றும் திருமண ஆர்டர்களின்போது அவருக்கு மறக்காமல் ஒரு கேக் பார்சல் கொடுத்து வருகிறீர்களே! அதான் கேட்டேன்.”

“ஓ! அதுவா? அவர எனக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் வாயிலிருந்து ஒரு பொய்யும் வராது. உண்மை சொல்லி பிறரைச் சோதிக்க விரும்பாத இடத்தில் அமைதி காத்திடுவார். எதிர்மறையாக எதுவுமே பேசுவதில்லை. எல்லாம் நேர்மறையாகவே அவர் வாயிலிருந்து வார்த்தைகள் வரும். சில சமயங்களில் விவிலியத்திலிருந்தும் எடுத்துக்காட்டுகளைக் கூறி அசத்துவார்.”

“உங்க வீட்டுக்காரர் எதுவும் சொல்லமாட்டாரா?

கேக் சுற்றுவதில் மும்முரமாக இருந்ததால் கவனிக்கவில்லை போலும்!

“கேக்கம்மா, நான் சொல்வது கேக்காம்மா?”

“என்ன கேட்ட? ஆங். அவருதான் இந்த ஐடியாவே கொடுத்தது. மாதா கோவிலுக்கு திருப்பலி பூசை எழுதச் சென்றார். பின்னர் டிப்போவில் காணிக்கைப் பொருள்கள் வாங்கியிருக்கிறார், வெளியே வந்தவர், ஆலயத்தின் மண்டபத்தில் எந்தவித பராக்கிற்கும் இடம் தராமல் அதுவும் ஞாயிறு ஓய்வுநாளில். பீடத்தையே உற்றுநோக்கியவராய் அமர்ந்து செபித்துக் கொண்டிருப்பவரைக் கண்டுள்ளார்.

அவரிடம் நேரில் அதுபற்றிப் பின்னர் கேட்டிருக்கிறார். ஓய்வுநாள் ஆண்டவருக்கு உரிய நாள் அல்லவா? அதுதான் ஆறு நாள்களும் பணி செய்துவிட்டு ஓய்வுநாளில் ஒரு மணிநேரம் ஆண்டவரின் சந்நிதானத்தில் அமர்ந்து செல்வதை வழக்கமாகக் கொண்டிருக்கிறேன்.

இதைக் கேட்டதும் கேக் ஆர்டரில் முதற்கனியை ஆண்டவருக்குக் கொடுக்க நினைத்ததை இவருக்குக் கொடுப்போம் என்று தீர்மானித்துள்ளார். அதுவே வழக்கமாகிவிட்டது. கேக் ஆர்டரும் தடையில்லாமல் கிடைத்து வருகிறது.”

“ஜாடிக்கேத்த மூடிதான் போங்க. அக்கா, நீங்கள் உங்கள் இல்லத்தில் மாதந்தோறும் செபமாலை, மாதா மன்றாட்டுமாலை செபித்து வருகிறீர்களே! அதற்கும் தாராளமாக டிபன் ,காபி என செலவழிக்கிறீர்களே! அப்புறம் உங்கள் செபக் குழுவினர் வேலைவாய்ப்பு, திருமணம், குழந்தை பாக்கியம் மற்றும் உடல்



நலம் குன்றியவர்களுக்காக அவர்கள் இல்லம் சென்று செபம் செய்து வருகிறீர்களே! போர் அடிக்கவில்லையா? எப்படி தொடர்ந்து பணியாற்றுகிறீர்கள்?

"எல்லாரும் தமக்கு தேவை வரும்போது தான் ஆண்டவரைத் தேடுவார்கள். ஆனால் நாம் பிறரின் தேவையை அறிந்து வேண்டுதல் செய்தால் அன்னை மரியாவின் பரிந்துரையில் அவர்களுக்கு நிறைவேறும் என்ற நம்பிக்கையில் செய்கிறோம்."

"இதற்கு ஏதாவது முன்னுதாரணம் உண்டோ?"

"ஆமாம், நூற்றுவர் தலைவர் சகல அதிகாரமும் கொண்டவர். ஆனால், தன் ஊழியனை குணப்படுத்த ஆண்டவரால் மட்டுமே முடியும் என்று பல மைல்களைக் கடந்து நேரில் வந்து இயேசுவிடம் வந்து வேண்டுதலை பெற்றார் அல்லவா! மருத்துவர், மருந்து, மாத்திரைகள் எல்லாம் வயது ஒரு நம்பர் மாதிரி என்பார்களே! அதுபோலத்தான். குணம் தருவது, உயிர் கொடுப்பது எல்லாம் கடவுளின் கையில் உள்ளது."

"அப்படியானால் மருத்துவரிடம் செல்வது வீணாக்கா?"

"மருத்துவரையும் கடவுள்தானே படைத்துள்ளார். அவரிடம் சென்று மருத்துவம் பார்ப்பது அவசியம்தானே. செசாருக்குக் கொடுக்க வேண்டியதை செசாருக்கும் கடவுளுக்குக் கொடுக்க வேண்டியதை கடவுளுக்கும் கொடுப்பது தானே முறை.

"நீங்கள் சொல்வது சரிதான் அக்கா. நன்றி நான் வருகிறேன் அக்கா."



ம. வெனான்சியஸ்



# பணிமய சாட்சியம்

135

## தங்கம், ரோச் காலனி

நான் சகாய மாதா கோயில் பங்கைச் சார்ந்தவள். என்னுடைய மகன் ஒரு கம்பெனிக்கு Shipment பண்ணின இடத்திலிருந்து Cargo Frieght, Airways charge என எல்லாம் சேர்த்து ரூபாய் 30 இலட்சம் வரவேண்டியிருந்தது. அந்த கம்பெனி Ownerருடைய மகன் ஒரு வருட காலமாக ஏமாற்றிக் கொண்டிருந்தான். என் மகன் தவிப்பதைப் பார்த்து நான் என்னுடைய தெய்வத்தாய் திவ்விய சந்தமரிய தஸ்நேவிஸ் மாதாவிடம் வந்து முழந்தாளிட்டு தினமும் ஒரு ஜெபமாலை சொல்லி வந்தேன். போன வருடம் ஆகஸ்டு மாதத்திலிருந்து என்னுடைய தாய் கொஞ்சம் கொஞ்சமாக அந்த பணத்தை அவனிடம் பெற்றுத் தந்தார்கள். என்னுடைய தாய்க்கு கோடான கோடி நன்றியை சமர்ப்பிக்கிறேன். மேலும் என்னுடைய மகன் கோயம்புத்தூரில் வேலை பார்க்கிறான். 39 ஆண்டு காலமாக என் தாயின் திருவிழாவைப் பார்த்த மகனுக்கு கடந்த ஆகஸ்டு 2025 திருவிழா கிடைக்குமா என்று பரிதவித்து கொண்டிருக்கும்போது 'உங்கள் மகனுக்கு சித்தமானால் என் மகனை நீங்கள்தான் கூட்டிக் கொண்டு வர வேண்டும்' என்று தாயிடம் வேண்டினேன். தாய் என் கண்ணீரைத் துடைத்தார். இந்த அற்புதத்தை செய்த தாய்க்கு நாங்கள் எல்லோரும் முழந்தாள்படியிட்டு கரம் குவித்து தாயின் பாதத்தில் எங்களுடைய நன்றியை சமர்ப்பிக்கிறோம். இயேசுவுக்கே புகழ்! இயேசுவின் இரத்தம் ஜெயம்! தஸ்நேவிஸ் மாமரியே வாழ்க! எவ்வளவு கோடி நன்றி சொன்னாலும் அது மிகையாகாது.

# விவிலியப் போட்டி 130

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 11 முதல் 15 வரை**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

## ஓரிரு வார்த்தையில் விடையளி

1. இயேசு முன் பணிந்து ஐயா எனக்கு உதவி அருளும் என்று கேட்டவர் யார்?
2. யார் பக்கம் கையை நீட்டி என் தாயும் சகோதரர்களும் இவர்களே என்றார்.
3. இயேசு மக்கள் கூட்டத்திடம் யாரைப்பற்றி பேச தொடங்கினார்
4. குறுநில மன்னன் யார்?
5. மானிட மகனுக்கு கட்டுப்பட்டது எது?

## கோடிட்ட இடங்களை நிரப்புக

6. மரம் நல்லது என்றால் .................... நல்லதாக இருக்கும் .
7. ஓய்வு நாளில் ................... நன்மை செய்வது முறை .
8. ...................வெளிவருவதே மனிதரை தீட்டுப்படுத்தும்.
9. எல்லா விதைகளையும் விட சிறியது ................... .
10. நான் ...................., ...................உடையவன்.

# விவிலியப் போட்டி 129

**ஜனவரி 2026** — *விடைக்குறிப்புகள்*

**மத்தேயு நற்செய்தி அதிகாரம் 6 முதல் 10 வரை**

**பொருத்துக.**

| | | | |
|---|---|---|---|
| 1. | தட்டுங்கள் | - திறக்கப்படும் | 7:7 |
| 2. | சுங்கச் சாவடி | - மத்தேயு | 9:9 |
| 3. | கண்தான் | - உடலுக்கு விளக்கு | 6:22 |
| 4. | கேளுங்கள் | - கொடுக்கப்படும் | 7:7 |
| 5. | அறுவடை மிகுதி | - வேலையாட்கள் குறைவு | 9:37 |
| 6. | நல்ல மரம் | - நல்ல கனி கொடுக்கும் | 7:17 |
| 7. | தேடுங்கள் | - கண்டடைவீர்கள் | 7:7 |
| 8. | ஒரு வார்த்தை | - நூற்றுவர் தலைவர் | 8:8 |
| 9: | நானும் உம்மை பின்பற்றுவேன் | - மறைநூல் அறிஞர் | 8:19 |
| 10. | கதரேனர் | - பேய் பிடித்த இருவர் | 8:28 |

**7, 8, 6, 10, 1, 4, 3, 2, 5, 9**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.02.2026**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.



**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



# பிப்ரவரி 2026

**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 215**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து**
**சரியான விடை எழுதியவர்கள் : 124**

**விடை எழுதிய அன்பியங்கள் : 28**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. சிறுமலர் அன்பியம் — **விஜி சகாயராஜ்**
2. சூசையப்பர் அன்பியம் — **கிறிஸ் ரீஜோ**
3. வியாகுல மாதா அன்பியம் — **ஜெரிஷா**
4. அந்தோணியார் அன்பியம் — **சரோஜா மஸ்கரனாஸ்**

## பாராட்டுக்குரியவர்கள் : 120

**அந்தோனியார் அன்பியம்**
5. பிருந்தா
6. ரீனா மொறாயிஸ்
7. ஜெயா
8. லீனா கருணா
9. ஜெசி

**அன்னை தெரசா**
10. ஜான்சி ராணி
11. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
12. டென்சி
13. கவாஷினி ஆல்வின்
14. குரூஸ் ஷாலினா
15. ஜெரினா செல்வம்
16. நான்சி
17. பிரவீனா ரவி
18. அலைனா சந்தலேனா

**கிறிஸ்தரசர்**
19. செலஸ்கி கிளமென்ட்
20. ரெக்ஸ் கிரீன்வெல்
21. ஜூலியட் சாவியோ
22. லூரட் வசந்த்
23. ஜாய் ரோச்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
24. சுரேஷ் பிரேமா
25. சுகன் மோனிஷா
26. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
27. டாரல் தீத்தோணிஸ்
28. ராஜா ஜரின்

**திவ்யபாலன் அன்பியம்**
29. சகாயராணி தனராஜ்
30. ஸ்டார்லக் ஏஞ்சலின்
31. சென்சிலா சகாயராஜ்
32. பிரின்சி

**பாத்திமா மாதா**
33. சுகந்தா ஸ்டெனி
34. பிச்சம்மாள்
35. அனு ஆல்வின்
36. ஸ்டெபி ரீகன்
37. ரீனா ராஜா
38. லிண்;டா சீலன்
39. பிளேரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
40. இருதயம்மாள் கொன்சால்
41. சேவியர் அம்மாள் கோமஸ்
42. பிரைட்டன் ஜெரோபின்
43. சித்ரா மோத்தா
44. பாப்டிஸ்டா
45. செல்வி புரோ
46. சகாயராணி

**ஜெபமாலை மாதா**
47. சகாயம்மாள் பெனடிக்ட்
48. கல்யாணி செல்வராஜ்
49. டிரிசா

**ஜூடு அன்பியம்**
50. கிறிஸ்டோ ஜெபினா
51. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
52. ஜோ டிரினிஷா
53. ஜூலியஸ் தல்மேதா
54. அல்பின்
55. ரஸ்கின் வசந்தா
56. செல்வராணி
57. சார்லட் பிராங்
58. சாந்தி ஆல்ட்ரின்
59. எலிஜா இம்மானுவேல்
60. வெனிட்டாள்
61. ஜெயா அகஸ்டின்

**குழந்தை தெரசா**
62. பெர்லி டென்சன்
63. கிறிஸ்டி லிஸ்டன்
64. பெனி முறாய்ஸ்

**குழந்தை இயேசு**
65. மோனிகா செபஸ்டின்
66. எமல்டா
67. சுகிர்தா
68. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
69. ரொசாரி கோமஸ்
70. வெர்ஜினியா
71. லீமா ரோஸ் ஜாய்

**லூர்து மாதா**
72. ஆலிவர் வி. ராயர்
73. ஜெனோ சேவியர்
74. ரோஸ்லின் தாமஸ்
75. பிலோ கோமஸ்
76. ரஜூலா ஜான்போஸ்கோ
77. சாண்டினா

**மிக்கேல் அதிதூதர்**
78. ஜோஸ்பின் பர்னாந்து

**பனிமய அன்பியம்**
79. சுரேஷ் ஆனி
80. ஜாக்குலின் வினோதினி
81. ராணி
82. ஜூடு ரதி
83. சகாயராஜா சகாயராணி
84. அந்தோணிசாமி

**பவுலடியார்**
85. ஒபிலியா தாமஸ்
86. ராஜா ரோஸ்லின்

**பரிபூரண மாதா**
87. சப்னா கினிஸ்டன்

**பொம்பெய் மாதா**
88. இம்மாக்குலேட் சதீஷ்
89. லூடா கான்ஸ்டன்
90. அண்டோ எஃபினா
91. தெரசா பிரகாஷ்
92. டிரைபேனா
93. மேத்யூ கர்டோசா
94. சித்ரா அலாய்
95. டிஃபானி அண்டோ
96. ஸ்னோ ஆல்பிரிக்

**இராயப்பர்**
97. டெய்ஸி
98. ரொமில்டா வெனான்சியுஸ்
99. நேவிஸ் அம்மாள்
100. போஸ்கோ ரெனோ

**சவேரியார்**
101. டெலிலா அமலன்
102. அனுஷியா பீட்டர்
103. வினிஸ்டா ஷெரின்
104. ஜோஸ்பின் வில்மா
105. ஜோர்னல் மெர்சி
106. ஜான்சி ஜெயக்குமார்

**செபஸ்தியார்**
107. ஜெஸிலா சேவியர்
108. அந்தோனியம்மாள் டென்சிங்
109. பிரவீனா

**சிந்தாயாத்திரை மாதா**
110. ஜூடி ஆரோக்கியராஜ்
111. டோனஸ் ராயன்
112. லாசர் செல்வி
113. நேசம்

**சிறுமலர் அன்பியம்**
114. எல்சிட்டா ஆனந்தன்
115. விஜிலியா
116. தாயம்மாள்

**சூசையப்பர்**
117. ஹேமலதா
118. மென்சி
119. சவுமியா ஆல்டமென்

**திருச்சிலுவை**
120. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
121. ரமணி டிவோட்டா
122. ஆரோன் ஷாரோன்
123. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
124. லூர்து லினட்





## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 91

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | |
|---|---|
| 125. சிவகாசி | ஜெர்லின் |
| 126. திண்டுக்கல் | ஜெர்மேன் |
| 127. லயன்ஸ்டவுண் சகாய மாதா | டோமினிக் |
| 128. யூதா ததேயு கோவில் | ஆரோக்கிய சர்மிளா |

## பாராட்டுக்குரியவர்கள் : 87

**சென்னை**
129. ரெஜினா கிரகோரி
130. பிரேமா குணசீலன்
131. மேமா ஸ்டீபன்
132. கமலஜோதி ஜெயசீலன்
133. ஆண்டனிகா ஷெர்லி

**கொடைக்கானல்**
134. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
135. சகோ. ஜான்சி மேரி
136. ஜெஸிந்தா மேரி

**திருச்சி**
137. ஜான்ஸி ராணி
138. மோனிட்டா கிறிஸ்டி
139. மேத்யூ விவேக்
140. ஜெக ரட்சகன்
141. டோனி
142. பிரின்ஸ் ஜெரோம்

**ஆறுமுகநேரி**
143. ஜெயராணி

**ஆலந்தலை**
144. பொன்சேகா தங்கராஜ்
145. மரியம்மாள்
146. சகாயராணி

**தருவைக்குளம்**
147. மைக்கேல் ஸ்டிபானி
148. லில்லி சோபியா

**திருப்பூர்**
149. ததேயூஸ் கரோலின்
150. பிரான்சிஸ் ஆர்லன்

**தேனி**
151. சூர்யா அன்பு
152. குழந்தை திரேஸ்

**புதியம்புத்தூர்**
153. ஹெலன் அன்னமனி

**கயத்தார்**
154. அமல்ராஜ்

**திண்டுக்கல்**
155. ரோசாலி
156. பாத்திமா மெர்லின்

**கடலூர்**
157. ஹென்றி தாஸ்

**வீரபாண்டியபட்டணம்**
158. ரேச்சல் சாந்தினி

**உவரி**
159. ஆர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
160. ஸ்நோவின்

**பரமக்குடி**
161. சைமன் சாந்தி

**சூலூர்**
162. சத்யா சேவியர்

**திருநெல்வேலி**
163. மெர்லின் ரோஸி

**ஏரல்**
164. இன்ஃபன்டா தினேஷ்

**சங்கரன்கோவில்**
165. பிலேந்திரன்

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
166. ரமோலா கமிலஸ்
167. ஜெயா பெலிக்ஸ்
168. டீனுராய் ஜேசுபாலு
169. ஸ்னோசன்
170. கிரேட்டா ராஜா
171. ஜோக்கின் கிசிங்கிளி
172. பீட்டர் ஜெயந்தி

**குருஸ்புரம்**
173. ஆசிர்வாதம்
174. பௌவுசி ஜோ மைக்கேல்
175. பிளாசி செல்வராஜன்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
176. சகாயம்
177. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
178. சலைத் எலிசா
179. சக்கரியா சாமுவேல்

**யூதா ததேயு கோவில்**
180. ஜூடி ரீத்தம்மாள் மேரி
181. ரோஸ் சேவியர்
182. இம்மானுவேல் சேகர்
183. சகாய மேரி
184. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்
185. லூர்து சுவிதா
186. ஜெனட் சேவியர்

**அந்தோணியார் கோவில்**
187. டயானா வினோத்;
188. இருதயம்மாள் கபிரியேல்
189. வயோலா ஜான்சன் 190.

**மென்சிலா லொயோலா**
191. ரீடன்
192. மகேஷ் சுஜாதா

**காந்தி நகர்**
193. ரியாலினோ
194. கிளமென்சியா மேக்டன்
195. செலஸ்டின்
196. பிண்டன் சோபியா
197. சாந்தினி
198. ரமேஷ் நர்மதா

**அண்ணா நகர்**
199. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
200. சகாயிட்டா மச்சாது
201. ரூபி ஏஞ்சல்
202. அல்போன்சா பர்னான்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
203. சகோ. லோரா மேரி
204. சூசை நெவின்
205. சகோ. மரிய சூசை ரூபி
206. சகோ. ரூபல்லா மேரி
207. சகாய ஷீலா

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
208. வெர்ஜின்
209. தயாபர ராணி

**திரேஸ்புரம்**
210. கோல்வின் ஜேசுராஜ்
211. ஸ்நோ வெண்பா
212. கிருபா
213. ஆடன் ஸ்டேரீஷ்

**பாத்திமா நகர்**
214. ஷர்மிளா ரமேஷ்
215. மேரி ஹம்லின்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 216**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 215**

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 19)

பிப்ரவரி 2026

## பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

### நிகழ்ந்தவை

★ **01.01.2026 வியாழன்** – புத்தாண்டு நள்ளிரவுத் திருப்பலி நேரலையாக ஒளிபரப்பப்பட்டது. காலை 8 மணிக்கு மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை தலைமையேற்று திருப்பலி நிறைவேற்றினார்கள்.

★ **14.01.2026 புதன்** - எஸ்கலின் திருப்பயணிகள் இல்ல கண்காணிப்புக் குழு கூட்டம் நடைபெற்றது.

★ மாதத்திற்கு ஒரு கூட்டமாவது ஒரு அன்பியத்தில் நடத்தப்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாரத்திற்கு 7 அன்பியங்களாக மொத்தம் 4 வாரத்தில் 28 அன்பிய கூட்டங்களையும் நடத்த ஏற்பாடு செய்யப்படுகிறது.

★ **15.01.2026 வியாழன்** - காலை 06.30 மணிக்கு பொங்கல் சிறப்புத் திருப்பலியாகக் கொண்டாடப்பட்டது. திருப்பலியின் நிறைவில் வந்திருந்த அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது.

★ **26.01.2026 திங்கள் – பேராலயம் பசிலிக்காவாக உயர்த்தப்பட்ட நாள்.**

– பொங்கல் மற்றும் குடியரசு தின விழாவையொட்டி நமது பங்கின் பனிமய மாதா சபையினரின் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன.

### நிகழ இருப்பவை

★ **01.02.2026 ஞாயிறு முதல் 11.02.2026 புதன் வரை** புனித லூர்து அன்னை கெபியில் அருளிக்க ஆசீரும், திருப்பலியும் நடைபெறும்

★ **06.02.2026 மாதத்தின் முதல் வெள்ளி** நோயாளர்கள், முதியோருக்கு இல்லங்களில் நற்கருணை வழங்கப்படும்.

★ **07.02.2026 மாதத்தின் முதல் சனி** மாலையில் சப்பரப் பவனியும், நவநாள் வழிபாடும் நடைபெறும்.

★ **10.02.2026 செவ்வாய் அன்று மாலை 06.30 மணிக்கு** மாலை ஆராதனையும், **11.02.2026 புதன் அன்று காலை 06.30 மணிக்கு** திருவிழாத் திருப்பலியும், மாலை 06.30 மணிக்கு புனித லூர்து அன்னையின் சப்பரப் பவனியும் நடைபெறும்.

★ **08.02.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு** 10, 11, 12 ஆம் வகுப்பு மற்றும் நீட், டெட் அரசுத் தேர்வு எழுதவிருப்போருக்கான சிறப்புத் திருப்பலி நடைபெறவிருக்கிறது.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நான் உடலால் உங்களோடு இல்லாவிடினும்
உள்ளத்தால் உங்களோடு இருக்கிறேன்"
(1கொரி 5:3)



மண்ணுலகில்
12.01.1964

விண்ணுலகில்
14.02.2025

## R. அருள்சீலி பர்னாந்து

உறவுகளோடு : 61

உங்கள் நினைவுகளோடு
வாழும்

கணவர் :
**P. ராபர்ட் பர்னாந்து**
மக்கள், மருமக்கள்
மற்றும்
குடும்பத்தினர்

2H/569, கதிர்வேல் நகர், 4வது தெரு மேற்கு,
தூத்துக்குடி - 8.

# நினைவு அஞ்சலி

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன"

(ஞானம் 3:11)

## 10ஆம் ஆண்டு — ஆறாம் ஆண்டு

மண்ணில்
15.11.1930

விண்ணில்
04.02.2016

வயது : 85



மண்ணில்
03.04.1940

விண்ணில்
14.03.2020

வயது : 80

## S. ஜோசப் J. சேவியரம்மாள்

- மகன்கள்

## 30ஆம் ஆண்டு

"நானோ, கடவுளின் இல்லத்தில் பச்சை ஒலிவமரக்கன்றுபோல் இருக்கின்றேன்"

(திபா 52:8)



## J. ஜெயந்தி M.A.

மண்ணில்
02.07.1963

விண்ணில்
27.01.1996

Age : 32

30 ஆண்டுகள் கடந்தாலும்
நகர்வதில்லை உன் நினைவு!
அன்று மறைந்தாலும்...
இன்றும் வாழ்கிறாய் எங்கள் நினைவுகளோடு!

- சகோதரர்கள்

# நினைவஞ்சலி

"நான் உடலோடு உங்களோடு இல்லாவிடினும்
உள்ளத்தால் உங்களோடு இருப்பேன்"
(1கொரி 5:3)



## எட்டாம் ஆண்டு

## C. லிட்வின் பர்னாந்து

[ W/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]

மண்ணக தந்தையோடு 13.06.1927

விண்ணக தந்தையோடு 13.04.2018

## முதலாம் ஆண்டு

## C. ஜோன்ஸ் பர்னாந்து

[ S/o. கொலம்பஸ் பர்னாந்து (Late) ]



மண்ணக தந்தையோடு 16.12.1961

விண்ணக தந்தையோடு 07.02.2025

என்றும் உங்கள் நினைவில் வாழும் குடும்பத்தினர்

07.02.2026 சனிக்கிழமை
காலை 6.30 மணி
பரிசுத்த பனிமய அன்னை
திருத்தலப் பேராலயம்

நினைவுத் திருப்பலி

# 1st Year Remembrance

*Although I am absent in body but present in spirit (1 Cor 5:3)*



# Jesintha Fernando

| TO EARTH | AGE | TO HEAVEN |
|---|---|---|
| 23.06.1964 | 60 | 15.02.2025 |

*O Lord, grant eternal rest to her soul! May perpetual light shine upon her.*

HOLY MASS:
FEBRUARY.16.2026 | 11.00am

DEEPLY REMEMBERED BY

Husband : KANSTAN
Sons : DENISTAN | ANSTAN
Grand Daughter : TIARA | Daughter in law : MERISA
&
Family Members

*6th year Anniversary*

*My soul wait in silence for God only,*
*For my hope is from Him.*
*(Psalm 62:5)*



**Born**
**09.11.1977**

**Died**
**03.02.2020**

# ANTONY DASNAVIS VANITHA Fdo M.A, B.Ed.

*With sorrowing grief*

*Dear Husband :*

**Pombai Cruz Raj Fdo. S**

*Sweet daughter :*

**Josephine Wilma Fdo. P**

## விண்ணக வாழ்வின்

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில் இருந்து விண்ணிற்கு விரைந்த
எம் இமைகளுக்கு எங்கள் இதயத்தின் சமர்ப்பணம்

"ஆண்டவர் கையில் நீ அழகிய மணிமுடியாகத் திகழ்வாய்
உன் கடவுளின் கரத்தில் அரச மகுடமாய் விளங்குவாய்" (எசாயா 62:3).



மண்ணில்
06.08.1950

விண்ணில்
18.02.2023

# S. ஜோபாய் மச்சாது

வயது : 73

அன்பே கோவில் அன்பே தெய்வம்
உயிர் இருக்கும்போது பாசமில்லை
உயிர் பிரிந்தபின்பு கல்லுக்கும்
மண்ணுக்கும் ஆசையோ ஆசை ஆசையா!

பாசத்துடன் நினைவுகூரும் **S. நட்சத்திரம்**

22, குருசடி சந்து, தூத்துக்குடி - 1.
ஸ்டனிஸ் ஆர்ட்ஸ் ஒர்க்

தொடர்புக்கு : 90259 41422
94434 67212

# விண்ணக வாழ்வின்
# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

"பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது.
என் பிரியமே! என் ரூபவதியே நீ எழுந்து வா"

(உன்னதப்பாட்டு 2:12-13)

## T. ஜெயந்தி



மண்ணில் : 26.03.1966
விண்ணில் : 02.02.2022



## J. இந்திராணி



மண்ணில் : 11.12.1946
விண்ணில் : 08.02.2022

**எங்களை விட்டுப் பிரிந்தாலும்**
**என்றும் எங்கள் உள்ளங்களில் வாழ்கிறீர்கள்!**

பிரிவால் வருந்தும்

**கணவர் : A. தாமஸ் ஜெயந்தி**
**பிள்ளைகள் : ஜேனஸ், ஜெனிக்கா**
**குடும்பத்தினர், உற்றார் உறவினர்கள்**

Ph : 88706 80332

SHINY Ph : 98421 31493